09.07.2025

OS No: 540/2019

வா.சா.2 திரு. நாகு, த/பெ. ஆறுமுகம்

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தாவா வழக்கின் 5ம் வாதி ஆவேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு எப்படி பாத்தியம் என்றால் கிரையம் பெற்ற வகையில் பாத்தியம். எனது தகப்பனார் பெற்ற கிரையம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு வயது என்ன என்றால் 58. எனது தகப்பனாருக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்த காளிமுத்து என்பவரின் மனைவி பெயர் திருவாயி என்றால் சரிதான். மேற்சொன்ன திருவாயி என்பவரின் மகள் தான் தாவா வழக்கின் 1ம் பிரதிவாதி வளர்மதி என்றால் சரிதான். காளிமுத்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். காளிமுத்து இறந்தபிறகு காளிமுத்து பெயரிலான சொத்துக்கள் திருவாயி பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. காளிமுத்து அவரது மகளான 1ம் பிரதிவாதி வளர்மதிக்கு 1 ஏக்கர் 69 சென்ட் நிலத்தை 20.09.2017ம் தேதி கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது (சாட்சி அதன் பிறகு ஆமாம் என்கிறார்). திருவாயி அவரது மகளுக்கு 1 ஏக்கர் 79 சென்ட்டைப் பொறுத்து இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வளர்மதி, தாவா வழக்கின் 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதிக்கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிரையமானது 1 ஏக்கர் 69 சென்ட் என்றால் சரிதான். மேற்படி கிரையம் எழுதி கொடுத்தது சம்மந்தமாக 1ம் பிரதிவாதி வளர்மதியிடம் நாங்கள் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான், போலிசில் புகார் கொடுத்துள்ளோம். போலிசில் கொடுத்த புகாரில் நானும், புகார்தாரராக சேர்ந்துள்ளேனா என்றால் ஆமாம். அது சம்மந்தமான புகார் மனுவை கோர்ட்டில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவானது போலிசாரால் Refer செய்து முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நிலுவையில் உள்ளது. தாவா சொத்தைப் பற்றி தெரியுமா என்றால் தெரியும், எங்கள் அனுபவத்தில் உள்ளது. நான்

வசிக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்குமிடையே எவ்வளவு தொலைவு என்றால் 4 கி.மீ தூரம் இருக்கும். எனது தந்தை எவ்வளவு விஸ்தீரண நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் 5 சென்ட், சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு நான்குமால் எல்லை விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பா கிரையம் வாங்கியதாக சொல்லும் கிரையப்பத்திரம் மோசடியானது என்றும், அதில் காளிமுத்து கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வளர்மதி கிரையம் கொடுத்ததின் அடிப்படையில் 2, 3 பிரதிவாதிகள் பேரில் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல, எங்கள் அனுபவத்தில் உள்ளது. வா.சா.ஆ.5 மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.07.09 17:24:41 +0530